

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 19.03.2025 | மதுரை வடக்கு | மதுரை கிழக்கு | பேருந்து நிலையம் அருகில், ஆனையூர் | **திண்டுக்கல் லியோனி,** சி.ராஜபாரதி |
| 2 | 19.03.2025 | ஈரோடு மத்திய | பெருந்துறை | காஞ்சிக்கோயில் | இந்திரகுமார் தேரடி, ரா.அபிநயா |
| 3 | 19.03.2025 | விழுப்புரம் வடக்கு | திண்டிவனம் | கூனிமேடு | வழக்கறிஞர் தமிழன்பிரசன்னா, ச.ஷாநவாஸ் |
| 4 | 20.03.2025 | மதுரை வடக்கு | சோழவந்தான் | சந்தை அருகில், வாடிப்பட்டி | **நாஞ்சில் சம்பத்,** அ.செசிலின் சந்தியா தீப்தி |
| 5 | 20.03.2025 | விழுப்புரம் வடக்கு | செஞ்சி | அப்பம்பட்டு | **பொன்.முத்துராமலிங்கம்,** குடிஅரசு |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 16–03–2025.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.3.2025) முகாம் அலுவலகத்தில், கழக தலைமை நிலைய அலுவலகச் செயலாளரும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவருமான துறைமுகம் காஜா சந்தித்து, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் 24.3.2025 அன்று சென்னை, திருவான்மியூரில் நடைபெறவுள்ள இஃப்தார் புனித ரமலான் நோன்பு திறப்பு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டலம் சார்பில் 04 மகளிர் விடியல் பயண புதிய BS–VI நகரப் பேருந்துகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

### மும்மொழிக் கொள்கை எனும்

## பேராபத்தை எப்படியாவது தடுத்து நிறுத்துங்கள் அப்பா!

### மதுரையிலிருந்து பிளஸ் 2 மாணவி மு.பிரியங்காகாந்தி முதல்வருக்கு உருக்கத்துடன் அன்பான கடிதம்!

மதுரை, மார்ச். 19–

"மும்மொழிக் கொள்கை எனும் பேராபத்தை எப்படியாவது தடுத்து நிறுத்துங்கள் அப்பா" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மதுரையிலிருந்து பிளஸ் 2 மாணவி மு.பிரியங்கா காந்தி உருக்கமுடனும் பாசத்துடனும் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் அவர்களுக்கு மதுரை தெப்பக் குளம் அருகிலுள்ள நிர்மலா பெண்கள் மேல்நிலைப் பள்ளி (அரசு உதவி பெறும் பள்ளி)யில் பிளஸ் 2 பயிலும் மாணவி மு.பிரியங்கா காந்தி பாசத்துடன் எழுதியுள்ள கடிதம் வருமாறு:–



**தமிழக மக்களால் பாசத்திற்குரிய அப்பாவாக, உயர்ந்து நிற்கும். எங்கள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் இரும்பு மனிதரும் எங்களுடைய முதலமைச்சருமான அன்பு அப்பாவிற்கு, மு.பிரியங்கா காந்தி எழுதுவது.**

**எனக்கு தினசரி நாளிதழ் படிக்கும் பழக்கம் உள்ளது. ஒன்றிய அமைச்சர் (தர்மேந்திர பிரதான்) அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களை நாகரீகம் இல்லாதவர்கள் என்று பாராளுமன்றத்தில் பேசியதாக செய்தித் தாளில் வாசித்தேன். எனக்கு பயங்கரமாக கோபம் வந்தது. இந்தியாவிற்கு மட்டுமல்ல; உலகிற்கே நாகரீகத்தை கற்றுக் கொடுத்தவர்கள் தமிழர்கள் தான் என்பது அவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பிருக்காது போல. மேலும் 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பையும், இயற்கையோடு வாழவும் கண்டுபிடித்து கற்பித்தவன் தமிழன்.**

**ஒருவேளை திராவிட முன்னேற்ற கழகம் என்ற ஒரு கட்சி இல்லை என்றால் தமிழர்களின் நாகரீகத்தையும், பண்பாட்டையும், பகுத்தறிவையும், என்னை போன்ற பெண் குழந்தைகளின் கல்வி அறிவையும், என்றோ சிதைத்திருப்பார்கள். R.S.S. வகையைச் சார்ந்த BJP என்னும் மதம் சார்ந்த அமைப்பு களால் அழிந்தே போயிருப்போம்.**

**மும்மொழிக் கொள்கை எனும் பேராபத்தை எப்படியாவது தடுத்திடுங்கள் அப்பா. மானம் ரோசம் உள்ள எவனும் ஹிந்தி திணிப்பை தடுத்தும் எதிர்த்தும் போராடாமல் இருக்க மாட்டான். அந்த வகையில் சாகும் வரை கூட உண்ணா விரதம் இருக்க தயாராக இருக்கிறேன் அப்பா.**

**எப்படியாவது 2026இல் மீண்டும் நீங்களே முதலமைச்சரா வந்திருங்கள் அப்பா. இல்லையென்றால் இன்று நாகரீகம் அற்றவர்கள் என்கிறார்கள் நாளை தமிழர்களை மனிதனாகக்கூட மதிக்க மாட்டார்கள்.**

**வாழ்க தமிழ், வளர்க தமிழன் வெல்க திராவிடம்.**

**2026இல் மீண்டும் வெற்றி பெற்று முதலமைச்சராக எனது வாழ்த்துக்கள் அப்பா.**

இவ்வாறு மு.பிரியங்கா காந்தி தமது கடிதத்தில் கூறியுள்ளார்.



திராவிட தமிழச்சி
**மு.பிரியங்கா காந்தி**
மதுரை